VOTE
October 26

# உங்கள் நகரம். உங்கள் வாக்கு.

ரொறன்ரோ நகரசபைத் தேர்தல்

திங்கட்கிழமை, ஒக்டோபர் 26, 2026

**toronto.ca/Elections**

நகரசபைத் தேர்தல் தகவல்களுக்கான உங்கள் நம்பகமான ஆதாரம்.

# றொறன்ரோவாசிகளே, வாக்களிக்கத் தயாராகுங்கள்!

## யார் வாக்களிக்கலாம்

றொறன்ரோவின் 2026 ஆம் ஆண்டு நகரசபைத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற, நீங்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

- ஒரு கனேடியக் குடிமகன்; மற்றும்
- குறைந்தது 18 வயது; மற்றும்
- றொறன்ரோ நகரில் வசிப்பவர்; அல்லது
- றொறன்ரோவில் வசிக்காதவராக இருந்தும், நீங்களோ அல்லது உங்கள் வாழ்க்கைத் துணையோ றொறன்ரோவில் சொத்தைச் சொந்தமாக வைத்திருந்தாலோ அல்லது வாடகைக்கு எடுத்திருந்தாலோ; மற்றும்
- எந்தவொரு சட்டத்தின் கீழும் வாக்களிப்பது தடைசெய்யப்படாதவர்.

றொறன்ரோவில் உங்களுக்கு எத்தனை சொத்துக்கள் சொந்தமாக இருந்தாலும் அல்லது வாடகைக்கு இருந்தாலும், நீங்கள் ஒருமுறை மட்டுமே வாக்களிக்க முடியும்.
நீங்கள் வசிக்கும் தொகுதியில் வாக்களிக்க வேண்டும்.

## நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தையும் கண்டறியுங்கள்

பின்வருவனவற்றிற்கு **toronto.ca/Elections** என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்:

- வாக்காளர் பட்டியலில் உங்கள் தகவலை உறுதிப்படுத்தவும், சேர்க்கவும் அல்லது புதுப்பிக்கவும் (ஒக்டோபர் 11 ஆம் திகதி மாலை 7 மணி வரை).
- எங்கே, எப்போது வாக்களிக்க வேண்டும் என்பதைக் கண்டறிவதற்கு.




- அடையாள ஆவணத் தேவைகள் குறித்து அறிந்துகொள்வதற்கு.
- டிஜிட்டல் வாக்காளர் தகவல் அட்டையைப் பதிவிறக்கம் செய்ய அல்லது பிரதியிட.
- உங்கள் வாக்குச்சாவடி தொடர்பான அணுகல் தகவல்களைக் கண்டறிய.
- மாதிரி வாக்குச் சீட்டையும் உங்கள் தொகுதியிலுள்ள வேட்பாளர் பட்டியலையும் பார்ப்பதற்கு.

## வாக்களிப்புத் தெரிவுகள்

### நேரில்

நீங்கள் முன்கூட்டிய வாக்களிப்பின்போது நேரடியாகவோ அல்லது தேர்தல் தினத்தன்றோ வாக்களிக்கலாம். **toronto.ca/Elections** **என்ற** இணையதளத்தில் உங்கள் வாக்களிக்கும் இடத்தைக் கண்டறியுங்கள்.

| **முன்கூட்டிய வாக்களிப்பு** | **தேர்தல் நாள்** |
|---|---|
| ஒக்டோபர் 6 முதல் 11 வரை | திங்கட்கிழமை, ஒக்டோபர் 26 |
| காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை | காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை |

### தபால் மூலம்

**toronto.ca/Elections** என்ற இணையதளத்தில் நீங்கள் தபால் மூலம் வாக்களிப்பதற்குக் கோரலாம். நீங்கள் பூர்த்திசெய்த தபால்வழி வாக்களிப்புப் படிவம், ஒக்டோபர் 14 ஆம் திகதி மதியம் 12 மணிக்குள் ரொறன்ரோத் தேர்தல் ஆணையத்தால் பெறப்பட்டிருக்க வேண்டும். நீங்கள் குறியிட்ட வாக்குச்சீட்டையும் அதற்கான துணை ஆவணங்களையும் திருப்பி அனுப்ப, ரொறன்ரோத் தேர்தல் அலுவலகத்தின் பாதுகாப்பான வாக்குச்சீட்டைப் போடும் பெட்டியைப் (drop box) பயன்படுத்தவும் அல்லது முன்கூட்டியே கட்டணம் செலுத்தப்பட்ட உறையைக் கனடா போஸ்ட் மூலம் தபாலில் அனுப்பவும். வாக்குச்சீட்டைப் போடும் பெட்டி உள்ள இடங்களையும் செயல்படும் நேரங்களையும் **toronto.ca/Elections** **என்ற** இணையத்தளத்தில் தெரிந்துகொள்ளுங்கள்.

***<u>தபால்-மூல வாக்களிப்பின் முக்கிய திகதிகள்</u>***

> ***கோரிக்கைக் காலம்:*** *செப்டம்பர் 1, செவ்வாய்க்கிழமை முதல் செப்டம்பர் 24, வியாழக்கிழமை மாலை 4:30 மணி வரை*
> ***திருப்பி அனுப்புவதற்கான காலக்கெடு:*** *புதன்கிழமை, ஒக்டோபர் 14, மதியம் 12 மணி*

### *பதிலாள் (Proxy) மூலம்*

*உங்களால் நேரில் அல்லது தபால் மூலம் வாக்களிக்க முடியாவிட்டால், உங்கள் சார்பாக வாக்களிக்க மற்றொரு வாக்காளரை பதிலாள் மூலம் நியமிக்கலாம். இந்த நபர் ரொறன்ரோவின் 2026 ஆம் ஆண்டு நகரசபைத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.*

*வாக்களிப்புப் பதிலாள் நியமனப் படிவத்தைக் கோருவதற்கு,* **VoterRegistration@toronto.ca** *என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும் அல்லது **311 என்ற** எண்ணிற்கு அழைக்கவும்.*

***<u>பதிலாள் வாக்களிப்பின் முக்கிய திகதிகள்</u>***

***வாக்களிப்புப் பதிலாள் நியமனத்திற்கான விண்ணப்பப் படிவம்:*** *செப்டம்பர் 1, செவ்வாய்க்கிழமை முதல்*
***பதிலாள் படிவம் பின்வருபவரால் நேரில் சான்றளிக்கப்பட வேண்டும்:*** *திங்கட்கிழமை, ஒக்டோபர் 26, மாலை 4:30 மணிக்கு*

## *வாக்காளர் பட்டியலில் இடம்பெறுங்கள்*

*உங்கள் வாக்காளர் பட்டியல் தகவலை உறுதிப்படுத்த, சேர்க்க அல்லது புதுப்பிக்க* toronto.ca/Elections *என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது 311 என்ற எண்ணை அழைக்கவும். வாக்காளர் பட்டியலில் இணையவழியாக மாற்றங்களைச் செய்வதற்கான காலக்கெடு, ஒக்டோபர் 11, ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணி ஆகும்.*

*குறிப்பாகக், கடந்த நகராட்சித் தேர்தலுக்குப் பிறகு நீங்கள் இடம் மாறியிருந்தாலோ அல்லது உங்கள் பெயரை மாற்றியிருந்தாலோ, வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இடம்பெற்றுள்ளதா என்பதையும், உங்கள் தகவல்கள் சரியானவையா என்பதையும் உறுதி செய்துகொள்வது முக்கியம். நீங்கள் வாக்களிக்கச் செல்வதற்கு முன் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இடம்பெற்றிருப்பது, வாக்களிக்கும் செயல்முறையை விரைவாக்கும்.*

*செப்ரம்பர் 20, ஞாயிற்றுக்கிழமைக்குள் உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தால், உங்களுக்கு வாக்காளர் தகவல் அட்டை ஒன்று தபாலில் அனுப்பப்படும்.*

*நீங்கள் முன்கூட்டியே வாக்களிக்கும்போதோ அல்லது தேர்தல் நாளன்றோ நேரில் சென்று வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரைச் சேர்க்கலாம்.*

***வாக்களிப்பதற்கு, நீங்கள் தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்து, அடையாள அட்டையைக் காட்ட வேண்டும்,***
***நீங்கள் வாக்காளர் பட்டியலில் இருந்தாலும் கூட.***

***<u>வாக்காளர் பட்டியலின் முக்கிய திகதி</u>***

***இணையத்தில் வாக்காளர் பட்டியலைப் புதுப்பிப்பதற்கான காலக்கெடு:*** *ஞாயிற்றுக்கிழமை, ஒக்டோபர் 11, மாலை 7 மணி*

## *வாக்காளர் தகவல் அட்டை*

*உங்கள் வாக்காளர் தகவல் அட்டையில் (VIC), எப்போது, எங்கே நேரில் வாக்களிக்க வேண்டும் என்பது பட்டியலிடப்பட்டுள்ளது. வாக்களிப்பு நிலையத்திற்கு உங்கள் VIC-ஐக் கொண்டு செல்வது வாக்களிப்புச் செயல்முறையை விரைவுபடுத்தும், ஆனால் வாக்களிக்க உங்களுக்கு VIC தேவையில்லை. உங்கள் VIC-ஐ அடையாளச் சான்றாகப் பயன்படுத்த முடியாது.*

***<u>வாக்காளர் தகவல் அட்டை முக்கிய திகதிகள்</u>***

***டிஜிட்டல் வாக்காளர் தகவல் அட்டை இணையத்தில் கிடைக்கும்:*** *செப்டம்பர் 1, செவ்வாய்க்கிழமை முதல்*
***வாக்காளர் தகவல் அட்டை தபாலில் அனுப்பப்படுவது:*** *செப்டம்பர் 28, திங்கட்கிழமை முதல்*

## *எதிர்கால வாக்காளர்களை வளர்ப்பது*

*சிறார்கள் ரொறன்ரோவின் 2027-ஆம் ஆண்டின் சிறந்த மரத்திற்காக வாக்களிப்பதோடு, வாக்களிக்கும் செயல்முறையைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம்.*

**சனிக்கிழமை, ஒக்டோபர் 10 மற்றும் ஞாயிற்றுக்கிழமை, ஒக்டோபர் 11**



**Basswood:**
என் நிழல் என்னைப் பூங்காவில் மிகவும் குளிர்மையானதாக ஆக்குகிறது!



**Paper Birch:**
என் விதைகள் நான் அனைத்து இடங்களிலும் வளர்வதற்கு உதவியாகத் தொலைதூரம் பறக்கின்றன!



**Red Oak:**
என் acorn காய்களும் இலைகளும் என் விலங்கு நண்பர்களுக்குச் சுவையான தின்பண்டங்கள்!



**Sugar Maple:**
என் இனிமையான சாறும் (sap) பிரகாசமான வண்ணங்களும் உலகப் புகழ்பெற்றவை!



**White Pine:**
என் ஊசிகள் ஆண்டு முழுவதும் என் விலங்கு நண்பர்கள் அனைவருக்கும் இருப்பிடத்தை வழங்குகின்றன!

காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை
அனைத்து 50 முன்கூட்டிய வாக்களிக்கும் இடங்களிலும்

**வேட்பாளர்களைச் சந்தியுங்கள்**

வெற்றி பெறும் மரம், ரொறன்ரோவின் 2027-ஆம் ஆண்டின் சிறந்த மரமாகப் பெயரிடப்பட்டு, அது மரநடுகைகள், பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள் வழங்குதல் போன்றவற்றில் கொண்டாடப்படுவதுடன், அனைத்துப் பொது மரக்கன்று வழங்கும் நிகழ்வுகளிலும் இலவசமாகக் கிடைக்கும்.

**வேடிக்கையான செயல்பாடுகள் மற்றும் வளங்களுக்கு toronto.ca/KidsVote என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்:**

- வாக்களிப்பு அட்டையில் குறியிடுவது எப்படி என்று கற்றுக்கொள்ளுங்கள்.
- எங்கே வாக்களிக்க வேண்டும் என்பதைச் சரிபார்க்கவும்.
- எந்த மரத்திற்கு மிகப்பெரிய இலைகள் உள்ளன என்பதைக் கண்டறியுங்கள். கடினமான பட்டை அல்லது சுவையான சாறு.
- தேனீக்கள், பறவைகள் மற்றும் அணில்கள் எந்த மரத்தை மிகவும் விரும்புகின்றன என்பதைக் கண்டறியுங்கள்.

# toronto.ca/KidsVote

## அணுகல் தகவல்

அனைத்து வாக்களிப்பு மையங்களும் அணுகல்களுடன் கூடியவை; மேலும், துணை நபர்கள் மற்றும் சேவை விலங்குகளின் பயன்பாட்டையும் அவை வரவேற்கின்றன. உங்கள் வாக்களிப்பு நிலையத்தின் அணுகல்தன்மை குறித்த தகவல்களை **toronto.ca/Elections என்ற இணையத்தளத்தில் காணலாம்.**

**அணுகக்கூடிய வாக்களிப்பு உபகரணங்கள்**

- வாக்காளர் உதவி முனையம் (VAT), மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் பல்வேறு உதவிச் சாதனங்களைப் பயன்படுத்தி, தங்களது வாக்குச்சீட்டைத் தனிப்பட்ட முறையிலும் சுதந்திரமாகவும் குறியிட அனுமதிக்கிறது.
- VAT-களில் தொடுதிரை, ஒலி வசதி, பிரெய்ல் (braille) விசைப்பலகை, உறிஞ்சி ஊதும் குழாய் சாதனம் (sip/puff tube device), ரொக்கர் பட்ல் (rocker paddle) மற்றும் எழுத்துரு அளவுகளையும் வண்ண வேறுபாட்டையும் சரிசெய்வதற்கான zoom அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.
- அனைத்து முன்கூட்டியே வாக்களிக்கும் இடங்களிலும், தேர்தல் நாளன்று ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள இரண்டு வாக்குச்சாவடிகளிலும் VATகள் வழங்கப்படும். தேர்தல் தினத்தன்று உங்களுக்கு வாக்காளர் உதவி முனையம் தேவைப்பட்டு, அது நீங்கள் வாக்களிக்க நியமிக்கப்பட்ட இடத்தில் இல்லையென்றால், முன்கூட்டியே 311 என்ற எண்ணை அழைப்பதன் மூலம் உங்கள் வாக்குச்சீட்டை மாற்றுமாறு கோரலாம்.

**ஏனைய சேவைகள்**

- உங்களால் நேரில் வாக்களிக்க முடியாவிட்டால், தபால் மூலம் வாக்களிக்கக் கோரலாம் அல்லது வாக்களிப்பதற்கான பதிலாள் ஒருவரை நியமிக்கலாம். மேலும் தகவல்களுக்குப், பின்பக்கத்தைப் பார்க்கவும் அல்லது toronto.ca/Elections என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.
- அனைத்து வாக்களிப்பு மையங்களிலும் உருப்பெருக்கித் தாள்கள் (magnification sheets), பிரெய்ல் (braille) வாக்களிப்பு வழிமுறைகள், பிரெய்ல் வாக்குச்சீட்டு மேலடுக்குகள்

(braille ballot overlays) மற்றும் வாக்களிப்பது எப்படி என்பது குறித்து 26 மொழிகளில் வழிமுறைகள் உள்ளன.

- உங்களுக்கு உதவுவதற்காக ஒரு நண்பரையோ அல்லது துணை நபரையோ அழைத்துச் செல்லலாம்.
- உங்களால் வாக்களிப்பு நிலையத்திற்குள் செல்ல இயலவில்லை என்றால், உங்கள் வாக்குச்சீட்டு வெளியே உங்களிடமோ அல்லது உங்கள் வாகனத்திற்கோ கொண்டு வந்து தரப்படும். மேலும் தகவல்களுக்கு 311 என்ற எண்ணை அழைக்கவும்.
- உங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடியில் ஏதாவது தடை ஏற்படும் என நீங்கள் எதிர்பார்த்தால், 311 என்ற எண்ணிற்கு முன்கூட்டியே அழைப்பதன் மூலம், வாக்குச்சீட்டை மற்றொரு வாக்குச்சாவடிக்கு மாற்றுமாறு கோரலாம்.
- நீங்கள் செவித்திறன் இழந்தவராகவோ, செவித்திறன் குறைபாடு உடையவராகவோ, அல்லது பேச்சுக் குறைபாடு உள்ளவராகவோ இருந்தால், உங்கள் TTY சாதனத்தைப் பயன்படுத்தி 711 என்ற எண்ணை அழைப்பதன் மூலம் தேர்தல் தகவல்களைப் பெறலாம்.
- மேலதிக அணுகல்தன்மை தொடர்பான உதவிக்கு, AccessibleElections@toronto.caஐத் தொடர்பு கொள்ளவும்.

## ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டை

வாக்களிக்க, உங்கள் பெயர் மற்றும் தகுதியான ரொறன்ரோ முகவரி அடங்கிய, ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு அடையாள அட்டையை (ID) தேர்தல் அதிகாரியிடம் நீங்கள் காண்பிக்க வேண்டும். புகைப்பட அடையாள அட்டை தேவையில்லை.

**ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள அட்டைக்கான உதாரணங்கள்:**

- ஒன்ராறியோ அரசால் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம், புகைப்பட அட்டை அல்லது மோட்டார் வாகன அனுமதி (வாகனப் பகுதி).
- கடன் அட்டை அல்லது வங்கிக் கணக்கு அறிக்கை அல்லது இரத்துச் செய்யப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட காசோலை.
- வீட்டு அடமானக் கடன் (mortgage) அறிக்கை, குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தம்.
- ஒரு வேலைவழங்குநரால் வழங்கப்பட்ட காசோலை அடித்துண்டு (stub), T4 அறிக்கை அல்லது சம்பளப் பற்றுச்சீட்டு.
- ஒன்ராறியோ வேர்க்ஸ் (Ontario Works) அல்லது ஒன்ராறியோ ஊனமுற்றோர் ஆதரவு திட்டத்திற்கான (Ontario Disability Support Program) நேரடி வைப்பு அறிக்கை.
- சொத்து வரி அல்லது வருமான வரி மதிப்பீட்டு அறிவிப்பு.

- மின்சாரம், தண்ணீர், எரிவாயு, தொலைபேசி அல்லது கேபிள் தொலைக்காட்சிக்கான பயன்பாட்டுக் கட்டணப் பற்றுச்சீட்டு.

***மின்னணு அடையாள அட்டை:***

- ஒரு ஆவணம் மின்னணு முறையில் வழங்கப்பட்டிருந்தால் (உதாரணமாக, டிஜிட்டல் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டு அல்லது கடன் அட்டை அறிக்கை), அதை உங்கள் கைத்தொலைபேசியில் அடையாள அட்டையாகக் காட்டலாம்.
- ஒரு ஆவணம் மின்னணு முறையில் வழங்கப்படவில்லை என்றால் (உதாரணமாக, உங்கள் ஓட்டுநர் உரிமத்தின் புகைப்படம்), அதன் புகைப்படம், பிரதி அல்லது ஸ்கான் செய்யப்பட்ட பிரதியை அடையாள அட்டையாகக் காட்ட முடியாது.







***ஏற்றுக்கொள்ளக்கூடிய அடையாள ஆவணங்களின் முழுமையான பட்டியலை* toronto.ca/Elections *என்ற இணையத்தளத்தில் காணலாம்.***




- உங்கள் வாக்காளர் தகவல் அட்டையை அடையாள அட்டையாகப் பயன்படுத்த **முடியாது**.
- உங்கள் கடவுச்சீட்டில் முகவரி குறிப்பிடப்படாததால், அதை அடையாள அட்டையாகப் பயன்படுத்த **முடியாது**.

toronto.ca/Elections

elections@toronto.ca

311

@cityoftoronto

City of Toronto

@cityofto